பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 69

திங்கட்கிழமை
03 பெப்ரவரி 2025

தை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**மஹிந்தவை வெளியேற்ற தயாராகிறது சட்டவரைவு**

»02

# தமிழர்களின் எதிர்பார்ப்பை நிச்சயம் நிறைவேற்றுவோம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



**கொழும்பு, பெப்ரவரி 3**

**வடக்கு மக்கள் தெற்குத் தலைவர் மீது முதன்முறையாக நம்பிக்கை வைத்துள்ளனர். இது மிக முக்கியமாகும். அந்த மக்களுக்கு நிறைய எதிர்பார்ப்புகள் உள்ளன. அவற்றை நாம் நிறைவேற்றுவோம். வடக்கில் உள்ள பிரச்சினைகளுக்கு கூடிய விரைவில் தீர்வுகாண்போம்.**

11

## புலிகளின் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துகின்றது அரசு!

### பழைய பல்லவியைப் பாடும் மஹிந்த தரப்பு



கொழும்பு, பெப்.3

மஹிந்த ராஜபக்ச விவகாரத்தில் புலிகள் மற்றும் புலம்பெயரிகளின் நிகழ்ச்சி நிரலையே அரசாங்கம் செயற்படுத்திவருகின்றது. புலிகளின் சூழ்ச்சிக்குள் மக்கள் சிக்கக்கூடாது. மஹிந்த ராஜபக்சவை பாதுகாக்க வேண்டும் - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

11

## சட்டவிரோத விகாரைக்கு காணிகளைக் கையளிக்க தையிட்டி மக்கள் தயார்!

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்.3

தையிட்டி விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் மாற்றுக்காணிகளைக் கேட்டார்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

11

## அதிக போதையால் இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், பெப்.3

திடீரென சுகவீனமுற்ற 29 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை திடீரென சுகவீனம் ஏற்பட்டதை அடுத்து, அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்

11

## பஸ்ஸில் கஞ்சா கடத்தல் இருவர் நேற்றுக் கைது!



கிளிநொச்சி, பெப்.3

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் கஞ்சா கடத்திச் சென்றவரும், அவருக்கு கஞ்சாவை விற்பனைசெய்த மற்றொருவரும் கிளிநொச்சி மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பஸ்ஸில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 2 கிலோ 200

11

## லண்டன் செல்லும் ரணில்

கொழும்பு, பெப்.3

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று லண்டன் பயணமாகின்றார்.

"நமது காலத்தில்

11

## இந்தியாவின் பட்ஜெட்டில் இலங்கைக்கு 300 கோடி!

புதுடில்லி, பெப்.3

இந்திய மத்திய அரசாங்கம் 2025 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ள நிலையில், வரவுசெலவுத் திட்டத்தில் இலங்கைக்காக 300 கோடி இந்திய ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் நிர்மலா சீதாராமன் வரவுசெலவுத் திட்டத்தை முன்வைத்தார். இந்திய வெளியுறவுத் துறை அமைச்சுக்காக 20 ஆயிரத்து 516 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக அதில் 5 ஆயிரத்து 483 கோடி இந்திய ரூபா

11

## தொலைத்தொடர்பு கோபுர திருத்தப்பணியிலிருந்தவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு!

வவுனியா, பெப்.3

தொலைத்தொடர்புக் கோபுரத்தில் திருத்தப் பணிகளை மேற்கொண்டவர் தவறி வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வவுனியா, மகாரம்பைக்குளத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது.

அநுராதபுரம், நிக்கவரெட்டியைச் சேர்ந்த சதுரங்க ஹேரத் (வயது-30) என்ற இளைஞரே

11



'தங்கட பட்ஜெட்டில பக்கத்துக்கு நாட்டுக்கும் ஒதுக்கிறதுக்கும் ஒரு பெரிய மனசு வேணும் பாருங்கோ'


## மாவையின் உடல் தீயுடன் சங்கமம்!

யாழ்ப்பாணம், பெப்.3

மூத்த அரசியல் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவின் உடல் நேற்று தீயுடன் சங்கமமானது.

மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக உடல் வைக்கப்பட்டிருந்தநிலையில் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. தொடர்ந்து

11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிக்கே நீதி கிடைக்க எங்கு செல்வது?

## இளஞ்செழியன் ஆதங்கம்

வவுனியா, பெப். 3

**நீதித்துறையில் 28 ஆண்டுகளைப் பூர்த்திசெய்த முதல் தமிழ் நீதிபதியாகக் கடமையாற்றி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டி ருக்க வேண்டியநிலையில் இழுத்தடிப்புகளாலும், கால தாமதங்களாலும் ஓய்வுபெற்றுள்ளேன். புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுறு கிறது என்று வவுனியா மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.**

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி யாக இருந்து ஓய்வுபெற்றுச் செல் லும் மா.இளஞ்செழியனின் சேவை நலன் பாராட்டு விழா நேற்றுமுன் தினம் வவுனியாவில் இடம்பெற் றது. இந்த நிகழ்வில் உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வவுனியாவில் நீதிவானாக 9 ஆண்டுளும், வவுனியாவில் மேல் நீதிமன்ற நீதிபதியாக 3 ஆண்டு கள் கடமைபுரிந்துள்ளேன். திரு கோணமலையில் 2008 - 2010 இல் மேல் நீதிமன்ற ஆணையா ளராகவும், மீண்டும் 2012-2014இல் திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராகவும், 2018-2022 மேல் நீதிமன்ற நீதி பதியாகவும் 8 ஆண்டுகள் திருகோ ணமலையில் கடமைபுரிந்துள் ளேன். கல்முனையில் ஒன்றரை ஆண்டுகள் மாவட்ட நீதிபதியாக வும், ஒன்றரை ஆண்டுகள் மேல் நீதமன்ற நீதிபதியாகவும் மொத்தம் 3 ஆண்டுகள் கல்முனையில் கட மையாற்றியுள்ளேன்.

நான் பிறந்த மண் யாழ்ப்பாணத் தில் 2015-2018 வரை மூன்றரை ஆண்டுகள் மேல் நீதிமன்ற நீதிப தியாக கடமையாற்றியுள்ளேன். மட்டக்களப்பில் சிவில் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக ஓராண்டு கடமைபுரிந்துள்ளேன். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிப தியாக நியமிக்கப்பட முழுத் தகை மைகளும் எனக்கிருந்தும் வழக் குகள், தடையுத்தரவுகள், இழுத்த டிப்புகள் என்னை ஓய்வுபெறுவ தற்குத் தள்ளியுள்ளன.

காலதாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதி என்று நான் பல இடங்களில் பேசினேன். அந்த நீதி என்மீதும் தொடுக்கப்பட்டுள்ளது. எதையும் ஏற் றுக்கொள்ளும் மனோபாவம் வர வேண்டும். நீதி கேட்டு எங்கும் செல்ல முடியாத நிலைமை. எனினும் முதல் நிலை நீதிமன்ற நீதிபதியாக எனது நீதிச் சேவை முடி வக்கு வந்துள்ளமை பெருமையே - என்றார். (ச-110,18)

## மஹிந்தவை வெளியேற்ற தயாராகிறது சட்டவரைவு



கொழும்பு, பெப். 3

முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக் சவை அரசின் உத் தியோகபூர்வ இல் லத்திலிருந்து வெளி யேற்றுவதற்கு நாடா ளுமன்றில் சட்டவ ரைவொன்றை சமர் பிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக பொதுப்பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரப் பிரதி அமைச்சர், சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மஹிந்த ராஜபக்ச தங்கியிருக்கும் விஜே ராம இல்லத்தின் 4.6 மில்லியன் வாட கையை செலுத்தவேண்டும். இல்லை என்றால் அதனை விட்டு வெளியேற வேண் டும் என்று அண்மையில் அறிவித்தி ருந்தார்.

அதனைத் தொடர்ந்து, மஹிந்த ஆதரவுத் தரப்புகளில் இருந்து அரசாங்கத்துக்கு எதி ராகக் கடும் எதிர்ப்புகள் வெளிப்பட்டது. இந்த நிலையில் மஹிந்த வீட்டை விட்டு வெளியேறுமாறு கடிதம் மூலம் அறிவிக்க முடியாது என்றும் பதிலாக நாடாளுமன்றில் சட்டவரைவு ஒன்றைச் சமர்ப்பிக்க இருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பேருந்துக்கட்டணம் ஜூலையில் உயரும்



கொழும்பு, பெப். 3

ஆண்டுதோறும் ஜூலை மாதம் பஸ் கட்டணம் உயரும் என எதிர்பார்க்கப்படுவதாக லங்கா தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

முறையான பொதுப்போக்குவரத்து முறையால் நாடு வருடாந்தம் 500 பில்லியன் ரூபா இழப் பைச் சந்திக்கிறது. வாகன இறக்குமதி மீதான தடைகள் தளர்த்தப்பட்டவுடன் இந்த இழப்பு இரட் டிப்பாகும்.

இறக்குமதி செய்யப்படும் பஸ்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டுள்ளதால் ஆண்டுதோறும் ஜூலை மாதும் பஸ் கட்டணத்தை உயர்த்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

உயர்தர பேருந்துகளின் இறக்குமதியை உறுதி செய்யும் அதேவேளையில், பொதுப் போக்குவ ரத்து அமைப்பை மேம்படுத்த வேண்டியது அவ சியம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## கேட்டது 38 கிடைப்பது 20

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்.மாவட்டத்துக்கு 38 பேருந்துகளின் தேவைப்பாடு உள்ளதாகக் கோரப்பட்டநிலை யில் 20 பேருந்துகளே அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப் புக்குழுக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட போக்குவ ரத்துச் சேவைகளைத் திறம்பட நடத்துவதற்கு பேருந்துகளின் தேவைப்பாடுகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.இ.போ.ச.சாலைக்கு 23 பேருந்துக ளும் பருத்தித்துறை சாலைக்கு 10 பேருந் துகளும் காரைநகர் சாலைக்கு 5 பேருந்து களும் கோரப்பட்டன. இதற்கு போக்குவரத்து அமைச்சர் பதிலளிக்கையில், எதிர்வரும் மார்ச் மாதமளவில் யாழ்ப்பாணம் மாவட்டத் துக்குப் புதிதாக 10 பேருந்துகளும் ஏப்ரல் மாதமளவில் மேலும் 10 பேருந்துகளும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட உள் ளன - என்றார்.

அதேவேளை யாழ்.மாவட்ட இ.போ.ச. சாலை களின் புனர்நிர்மாணத்துக்கான நிதியாதுக் கீடு குறித்து கேட்கப்பட்டபோதிலும் அதற்குப் பதில் எதுவும் வழங்கப்படவில்லை. (ச-125)

## ஆட்டத்தை ஆரம்பித்தது பெரமுன

கொழும்பு, பெப். 3

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கை களை கிராமமட்டத்திலிருந்து நேற்று ஞாயிற்றுக் கிழமை முதல் ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு 'நாமலுடன் கிராமம் கிராமமாக' என்று பெயரிடப்பட்டுள்ளதாக பொது ஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இந்தப் பிரசார நடவடிக்கையை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட 14,000 கிராமங்க ளுக்கு விரிவுபடுத்த பொதுஜன பெரமுன திட்ட மிட்டுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 02.02.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம்: 0443
ஆங்கில எழுத்து: P | வெற்றி இலக்கம்: 4 6 6 6 9 8

**Super Ball DLB**
திகதி: 02.02.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2709 | ஆங்கில எழுத்து: Q | வெற்றி இலக்கம்: 06 36 38 44

**சனிதா DLB**
திகதி: 02.02.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: Y | வெற்றி இலக்கம்: 17 44 48 71 | வெற்றி வாரம்: 4870

**SASIRI DLB**
திகதி: 02.02.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 0614 | வெற்றி இலக்கம்: 23 46 47

**லக்ன ராசி DLB**
திகதி: 02.02.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
விருச்சிகம் | வெற்றி இலக்கம்: 08 09 16 54 | சீட்டிழுப்பு வாரம்: 4421

**KAPRUKA DLB**
திகதி: 02.02.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: D | சுப்பர் இலக்கம்: 36 | வெற்றி இலக்கம்: 33 43 51 71 | வெற்றி வாரம்: 1885

**அத கோடிபதி DLB**
திகதி: 02.02.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: F | வெற்றி இலக்கம்: 08 31 43 48 | வெற்றி வாரம்: 2535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டத்தில்

# 2642.29 ஏக்கர் காணி படையினரின் வசம்!

யாழ்ப்பாணம், பெப். 3

**யாழ்.மாவட்டத்தில் 2642.29 ஏக்கர் நிலப்பரப்பு படையினர் வசமுள்ளது என்றும் அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் யாழ்.மாவட்டச் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் மீள்குடியேற்றம், காணிவிடுவிப்பு என்பவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி குறித்த நிலப்பரப்பில் இராணுவத்தினரிடம் 1775.27 ஏக்கரும், கடற்படையினரிடம் 160.67 ஏக்கரும், விமானப்படையினரிடம் 660 . 05 ஏக்கரும், பொலிஸ் திணைக்களத்திடம் 28.28 ஏக்கரும் காணப்படுகின்றன. இதில் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினர் சுமார் 575 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரித்து வைத்துள்ளனர் என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-125)

# மணல் கடத்தல் இருவர் கைது!



யாழ்ப்பாணம், பெப். 3
சட்டவிரோதமாக மணல் கடத்திய குற்றச்சாட்டில் ஆனைக்கோட்டைப் பகுதியில் இருவர் மானிப்பாய்ப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது வீதியால் பயணித்த டிப்பர் வாகனத்தை வழிமறித்து சோதனையிட்டபோதே வாகனம் அனுமதிப்பத்திரமின்றிப் பயணித்தமை தெரியவந்தது.

அதனையடுத்து டிப்பரில் பயணித்த இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



யாழ்.மாவட்ட

# சுற்றுலா வழிகாட்டி நூல் வெளியீடு !

யாழ்ப்பாணம் , பெப்.03
யாழ்.மாவட்டத்தின் கலாசார ரீதியான சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சுற்றுலா மையங்கள் தொடர்பில் டிஜிற்றல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சுற்றுலா வழிகாட்டி நூல் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வைத்து யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் முன்னிலையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. (ச-22,66)

# 'மஹாபொல' ஏமாற்றமே!

கொழும்பு, பெப். 3
பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹாபொல மற்றும் புலமைப்பரிசில் மானியங்கள் சுமார் 4 மாதங்களாக மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, மஹாபொல மற்றும் புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியத்தின் முன்னாள் இயக்குநர் தெரிவிக்கையில்,

மஹாபொலக் கொடுப்பனவுகளை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கும் ஒப்புதல் அளித்தபோதிலும், அந்தத் தொகையை வழங்க திறைசேரியிடம் தற்போது போதுமான நிதி இல்லை-என்றார். (ச-இ)



# இந்தியாவின் பாதீட்டில் இலங்கைக்கு அதிக நிதி

கொழும்பு, பெப். 3
இந்திய வரவு - செலவுத்திட்டத்தில் இலங்கைக்காக 300 கோடி இந்திய ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசாங்கத்தால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் தாக்கல் செய்யப்பட்டது. நிதியமைச்சர் என்ற வகையில் நிர்மலா சீதாராமன் இந்த வரவு - செலவுத்திட்டத்தை முன்வைத்தார்.

இதில் இந்திய வெளியுறவு அமைச்சுக்காக 20,516 கோடி இந்திய ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அண்டை நாடுகளில் நீர்மின் நிலையங்கள், வீட்டு வசதி, வீதிகள், பாலங்கள் மற்றும் ஒருங்கிணைந்த சோதனைச்சாவடிகள் போன்ற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கை, பொருளாதார மந்த நிலையிலிருந்து மீண்டு வருவதால், அதற்கான ஒதுக்கீடு 245 கோடியிலிருந்து 300 கோடி இந்திய ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




**றோ**ட்டுயர்வே நாட்டுயர்வு. எந்தளவுக்கு ஒரு நாட்டின்ர றோட்டுகள் தரமா இருக்குதோ அந்தளவுக்கு அந்த நாடும் வளமா இருக்கும். சிலநேரங்களில நாடு திறமா இருக்கெண்டு மற்றவையை நம்பப் பண்றதுக்காகவும் இப்பிடி றோட்டுகளைத் திருத்திறவை. முந்தியொருக்கா நல்லாட்சி அரசாங்கம் சேடமிழுத்துக்கொண்டிருக்கேக்க, யாழ்ப்பாணத்து மழைத்தண்ணியையெல்லாம் சேர்த்து வைச்சு, குடிதண்ணியாப் பாவிக்கிற திட்டத்துக்கு அடிக்கல் நாட்டுறதுக்கு மைத்திரி வடமராட்சியில இருக்கிற கப்பூதுவெளிக்குப் போனவர். அடிக்கல் திறந்ததோட அந்தத்திட்டம் அப்பிடியே தறுக்கணிச்சுப் போட்டுது. இந்த ஒருநாள் கூத்துக்காக, மைத்திரியாரின்ர கார் கப்பூதுவெளி பள்ளந்திட்டி றோட்டில கதகளி ஆடினால் தங்கட வண்டவாளம் வெளில வந்திடும் எண்டு அதுக்குப் பொறுப்பான திணைக்களக்காரருக்கு ஒரே நெஞ்சிடி. உடனேயே அரக்கப்பரக்க அந்த றோட்டுக்கு மேலால பூசிமெழுகி, ஒருநாளைக்கு தாக்குப்பிடிக்கக் கூடியமாதிரி செய்துபோட்டினம். மைத்திரியும் அலுங்காமல் குலுங்காமல் அதால போய்வந்திட்டார்.

இப்ப என்னத்துக்கு அந்தப் பழங்கதை எண்டு நினைப்பியள்? எல்லாம் காரணமாத்தான். காலம் மாறினாலும் கோலம் மாறேலை எண்டதைச் சொல்லத்தான் உந்தக் கதை. போன சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு அநுர வந்திட்டுப் போனவரெல்லோ. அவரின்ர பயணத்திட்டத்தில வல்வெட்டித்துறைக்குப் போய்வாறதுதான் முக்கியமான நிகழ்வு. அதுக்காக அவர் அச்சுவேலியால தொண்டமானாறுக்குப் போற றோட்டாலதான் போக இருக்கிறார் எண்டது, அந்த றோட்டுக்குப் பொறுப்பான அதிகாரசபைக்கு தெரிய வந்திட்டுது. ஆனால் அந்த றோட்டில சந்திரமண்டலத்தைவிடவும் பள்ளமும் மேடும் கூடுதலாக இருக்கும். அதால போய்வாறவை எல்லாம் ஒருக்கா வளைஞ்சு நெளிஞ்சு, இறங்கி ஏறி வித்தை காட்டாத நாளேயில்லை. அந்த றோட்டால அநுர போனால், கட்டாயம் தங்களுக்கு 'டோஸ்' விழும் எண்டது அதிகாரிமாருக்குத் தெரியும். அதால முதல்நாளே தங்கட ஆளணி, அம்பு எல்லாத்தையும் களத்தில இறக்கி, அந்த றோட்டுக்கும் தற்காலிகமா ஒட்டுவேலை பார்த்திருக்கினம். இதைமாதிரி அநுர எந்தெந்த றோட்டால போக இருந்தாரோ அந்த றோட்டுகளிலையும் இடைக்கிடை இருந்த பள்ளம் திட்டியை நிரவி , றோட்டுக்கரையில இருந்த குப்பைகூழத்தைக் கிளீன் பண்ணி தாங்கள் வேலையில வெள்ளைக்காரர் எண்டு காட்ட வெளிக்கிட்டவை.

ஆனால் அவையின்ர கெட்டகாலம். அநுர இஞ்ச வரமுதலே தான் போகப்போற பாதையள் எல்லாத்தையும் பற்றி ஒருக்கா கேட்டுத் தெரிஞ்சு கொண்டுதான் வந்திருக்கிறார். அதில சில றோட்டுகள் இன்னும் திருத்துப்படாமல்,சனங்கள் போய்வரவே ஏலாத நிலைமையில இருக்கெண்டு தெரியவந்திருக்குது. அந்தத் தரவுகளை எல்லாம் கொண்டந்து, 'ஏன் இந்த றோட்டு இன்னும் இப்பிடி இருக்கு?' எண்டு கச்சேரிக் கூட்டத்தில அநுர சவுக்கால அடிச்ச மாதிரிக் கேக்க, 'எட இவ்வளவு பூசிமெழுகியும் கடைசியில பிடிபட்டுப்போட்டமே' எண்டு பொறுப்பான அதிகாரசபைக்காரர் அழாக்குறையா நிண்டவையாம். இதுக்குத்தான் மண்டையில இருக்கிற கொண்டையை மறக்கக்கூடாது கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக் கும்.தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்கக் காரியங்கள் இழுபறிக்குப் பிறகே முடியும். செலவு செய்யநேரிடும். சிலருக்கு திடீர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும்என்பதால்பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**கன்னி:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். கருத்துவேற்றுமை விலகி அந்நியோன்னியம் அதிகரிக்கும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**துலாம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு உகந்த நாள். எதிரிகள் வகையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மறையும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**விருச்சிகம் :** எதிலும் பொறுமை அவசியம். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகை கிடைப்பது தள்ளிப் போகும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** உற்சாகமான நாள். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். புதிதாகத் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தேவையான பணம் கையில் இருந்தாலும் தேவையற்ற செலவுகள் ஏற்படுவதால் மனதில் சஞ்சலம் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.





## மன்னார் மரியன்னை ஆலயத் திறப்பு நிகழ்வு

மன்னார், பெப்.3

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மன்னார் மரியன்னை ஆலய அபிஷேகமும் திறப்பு விழாவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மறைமாவட்டக் குருமுதல்வர் கிறிஸ்து நாயகம் அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25, 56)

## பண்ணிசை

யாழ்ப்பாணம், பெப். 3

இந்து சமய கலாசார அலுவலக திணைக்களம், யாழ். மாவட்ட செயலகம், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் சங்கானை பிரதேச செயலகங்கள் மற்றும் இலங்கை தேவாரப் பண்ணிசை வளர்ச்சிக் கழகம் ஆகியவை இணைந்து வழங்கும் தேவாரப் பண்ணிசை நிகழ்வு சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம் அய்யனார் கோயிலடி வடலியடைப்பில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் 7 மணி வரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் திருமுறைகளை கலாநிதி முனைவர் குமாரவயலூர் திருஞான பாலச்சந்திர ஓதுவார். நிகழ்வில் தேவார இசை கலைமாணிகள், சீர்காழி சகோதரிகள், வளவாளர்கள் பங்குபெறவுள்ளனர். (ச-22,63 )



## கடல்நீரை நன்னீராக்கும் இயந்திரங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ். வடமராட்சி கிழக்கு தாளையடிக் கடல் நீரை நன்னீராக மாற்றும் நிறுவனத்தால் முதல் கட்டமாக 20 பயனாளிகளுக்கு 40 குதிரை வலுகொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த.தங்கரூபனால் தாளையடி கடல் நீரை நன்னீராக்கும் திட்ட அலுவலகத்தில் வைத்து அவை கையளிக்கப்பட்டன.

வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கும். நிகழ்வில் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், நிர்வாகிகள், கடல் நீரை நன்னீராக்கும் திட்ட அதிகாரிகள் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,27)

## நீரிழிவு விழிப்புணர்வு யாழில் நடைபயணம்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். போதனா மருத்துவமனையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையம், யாழ். நீரிழிவுக்கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு நடைபயணம் யாழ். போதனா மருத்துவமனையின் முன்பாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபயணத்தில் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி, யாழ். போதனா மருத்துவமனையின் நீரிழிவுச் சிறப்பு மருத்துவ நிபுணர் சிவமகாலிங்கம் அரவிந்தன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினர், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-66)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 3

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமிகள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

அறிவே இல்லாதவனையும் அதிகம் இல்லாதவனையும் பணக்காரனாக்கும் வல்லமை தன்னம்பிக்கைக்கு உண்டு.

—டால்ஸ்டாய்—

# தீர்வுதான் தேவை, திணிப்புகளல்ல!


யாழ்ப்பாணம் - தையிட்டிப் பகுதியில் பொதுமக்களின் காணிகளை அடாத்தாகக் கைப்பற்றி அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றுவது தொடர்பில், வெளிப்படையாகவே 'கள்ள மௌனம்' காத்துள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பில் இடம்பெற்ற படுமோசமான - கேவலமான ஆக்கிரமிப்பை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆதாரபூர்வமாகவும், புள்ளிவிவரங்கள் ரீதியாகவும் விளக்கிய போதிலும் அந்த ஆக்கிரமிப்புச் சின்னத்துக்கான தனது எதிர்காலநடவடிக்கைதொடர்பில்ஒருவார்த்தையேனும் ஜனாதிபதி அநுர கதைக்கவேயில்லை.

இதைவிடவும் கண்டனத்துக்கு உரியமுறையில் - கண்ணியத்துக்கு அப்பாற்பட்ட வகையில் கடைகெட்டதனமாக கருத்துக்கூறி இந்த விடயத்தையே கேலிக்கூத்தாக்கிவிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா. தையிட்டி விகாரையின் அடிமுடி எதுவுமே தெரியாத குறித்த நாடாளுமன்ற உறுப்பினர், தானும் ஏதும் கருத்துச் சொல்லவேண்டுமே என்ற பதற்றத்தில் 'எங்கள் இந்துசமயம் இப்படி விகாரைகளை இடிக்கச் சொல்லவில்லை. கட்டிமுடிக்கப்பட்ட விகாரையை இடிக்கமுடியாது. அதற்காக அந்தக் காணிக்கு உரிய மக்களுக்கு நட்டஈட்டைக் கொடுத்து நல்லிணக்கமாக வாழ நாம் தயார்' என்று வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டியுள்ளார். சட்டவிரோதமாக, தனியாருக்குச் சொந்தமான காணியில் கட்டப்பட்ட இந்த விகாரையை இடிப்பதில் சிங்கள மக்களே ஆர்வம் காட்டாதபோதும், சில கோடரிக்காம்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் இப்படி கருத்துச் சொல்கிறேன் பேர்வழியென்று காரியத்தைக் கெடுத்துவிடுகின்றனர்.

'தையிட்டியில் அமைக்கப்படும் திஸ்ஸ விகாரை ஓர் ஆக்கிரமிப்புக் கட்டுமானம். பொதுமக்களின் காணியில் அமைக்கப்படும் அதை உடனடியாக அகற்றவேண்டும்' என்ற விடயம் வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் தீர்மானமாக எடுக்கப்பட்டு - நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அவ்வாறாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஒரு விடயத்தில், 'மக்களின் காணியை விகாரை எடுத்தால், விகாரையின் காணியை மக்களுக்குக் கொடுப்போம்' என்று அரச உயரதிகாரக் கட்டமைப்புக் கூறுகின்றது என்றால், பின்னர் எதற்காக பிரதேச - மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்துகின்றீர்கள்? எதற்காக அந்தக் கூட்டங்களுக்காக ஒதுக்கீடுகளை வழங்குகின்றீர்கள்?

இப்படி கண்டதையும் கதைத்து, ஒரு சீரான முடிவை எடுக்காமல் கலைந்து போவதற்காகவா இப்படி நேரத்தையும், பணத்தையும், பெரும் ஆளணியையும் வீணடித்து இப்படியான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்துகின்றனர்? உண்மையில், எதற்காக மாவட்ட - பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன என்ற தெளிவுபடுத்தலை, அந்தச் சிந்தனைகளின் பாற்பட்டு அவர்கள் மக்கள் மன்றில் விளக்கியே ஆகவேண்டும். அதிலும், மாற்றத்தை விரும்பும் ஜனாதிபதியாகத் தன்னை முன்னிறுத்தும் அநுரவும், அவர் பின்னால் மாற்றத்தை வேண்டிநிற்பதாகக் கூறிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தியினரும் தம் செயற்பாடுகளை சுயபரிசீலனை செய்வது மிகமிக அவசியம். எல்லாவற்றையும் விட, மக்களின் காணிக்குள் - அவர்களின் பூர்விக நிலத்தில் அத்துமீறிக் கட்டுமானம் ஒன்று அமைக்கப்படுகின்றது என்றால், அது விகாரையாகவே இருந்தாலும் அது 'ஆக்கிரமிப்பின் எச்சம்தான்'. அதற்கு நீங்கள் அங்கீகாரம் கொடுக்க விளைவது தவறானமுன்னுதாரணமாக அமையுமே தவிர, ஒருபோதும் தீர்வாக அமையாது. தமிழர்கள் தீர்வைத்தான் எதிர்பார்க்கின்றனர். தீர்வென்ற பெயரில் இடம்பெறும் திணிப்புகளையல்ல.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# உப்பின் விலை விரைவில் எகிறும்



கொழும்பு, பெப். 3

**இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்வதில் ஏற்படும் செலவுகள் அதிகரித்துள்ளதால் இம்மாதம் உப்பின் விலையும் அதிகரிக்கக்கூடும் என அம்பாந்தோட்டை உப்பு நிறுவனத் தலைவர் டீ.கே.நந்தன திலக தெரிவித்துள்ளார்.**

அதற்கமைய 400 கிராம் உப்புப் பக்கெற்றின் விலை 120 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் உப்புப் பக்கெற்றின் விலை 180 ரூபாவாக வும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக இவ்வாண்டின் முதலாம் காலாண்டில்உள்நாட்டுச்சந்தையில் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுகான உப்பு விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படலாமென அவதானிக்கப்பட்டது. இந்தநிலையிலேயே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1485 மெற்றிக் தொன் முதல் தொகுதி உப்பு கடந்த ஜனவரி 27ஆம் திகதி நாட்டை வந்தடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## சுதந்திரதினத்தன்று கைதிகளைப் பார்வையிட திறந்தவெளி அனுமதி

கொழும்பு, பெப். 3

சுதந்திர தினத்தையொட்டி சிறைக்கைதிகளை திறந்த வெளியில் சந்திப்பதற்கு அவர்களது உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை 4ஆம் திகதி இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கைதிகளைப் பார்வையிட வருபவர்கள் அவர்களுக்கான உணவு உள்ளிட்ட பொருள்களை போதுமானளவு வழங்குவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-23)

## ரோஹிங்யர்களை திருப்பியனுப்ப முடியாது

மனிதஉரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 3

அனைத்து நபர்களையும் பலவந்தமாக காணாமல் போதலில் இருந்து பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்தின் கீழ் அகதிகள் புகலிடக்கோரிக்கையாளர்களை அவர்கள் ஒடுக்குமுறைக்குள்ளாக கூடிய நாட்டுக்கு மீளச் செல்லுமாறு நிர்ப்பந்திக்க முடியாது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் தடுத்துவைக்கபட்டுள்ள ரோஹிங்கிய அகதிகள் குறித்து அரசாங்கத்துக்கு பரிந்துரைகளை முன்வைத்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பாடசாலைகளிலும் 'க்ளீன் சிறீலங்கா'

கொழும்பு, பெப். 3

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'க்ளீன் சிறீலங்கா' திட்டத்தின் நோக்கங்களை பாடசாலை மட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக கல்வித்துறையின் பிரதிநிதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கல்வி அமைச்சில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது சுகாதாரம், கழிவு முகாமைத்துவம், மாணவர்களின் நடத்தை மற்றும் நெறிமுறை குணங்களை வளர்ப்பது போன்ற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தொடர் திட்டங்கள் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. (ச-இ)

## அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

கொழும்பு, பெப். 3

நாடு முழுவதுமுள்ள 88 தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், தகுதிவாய்ந்த 79 அதிபர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவுள்ளனர். இதற்கான, நேர்முகத்தேர்வு எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை இசுருபாயவில் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - தை - 22
04.01.2025
சுபநேரம் : 11.05 - 12.35
ராகுகாலம் : 03.35 - 05.05
இலங்கை தேசிய சுதந்திர தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.3
மகளிர் விவகார அமைச்சினால், எதிர்வரும் மார்ச் மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர்தினத்தில் பெண் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் முகமாக, வட மகாணத்திலுள்ள பல்வேறுபட்ட துறைசார் பெண்சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திறந்த போட்டிகளாக நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் மகளிர் விவகார அமைச்சு, வட மாகாணம், இல 4 புரூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டிவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது npminwa@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது 0212220884, 0212220803 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ தொடர்புகொண்டு நுழைவுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளமுடியம் மேலதிக விபரங்களுக்கு https:\\np.gov.lk\ எனும் வட மாகாணசபையின் இணையத்தளத்தைப் பார்வையிடவும். (ச-25)

★★★★

யாழ்ப்பாணம், பெப்.3
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் 'தொடர்பாடலுக்கான ஆங்கிலம்', மனிதவள முகாமைத்துவம்' ஆகிய குறுகியகால கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பதாரர் 16 வயதுக்கு மேற்பட்டவராகவும், கா.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவிலுள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-25)



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கற்கும் 100 மாணவர்களுக்கு புலம்பெயர் நாடுகளிலுள்ள கல்லூரி பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்புடன் கற்றல் உபகரணங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. (ச-9)

# குள ஒதுக்கீட்டைக் காரணம்காட்டி இந்துபுரத்தில் காணிகள் அபகரிப்பு!

கிளிநொச்சி, பெப். 3
**கனகாம்பிகைக் குளத்தின் ஒதுக்கீட்டுப் பணிகள் என்று தெரிவித்து எல்லைக்கிராமங்களில் ஒன்றான இந்துபுரம் கிராம மக்களின் தனியார் உறுதி மற்றும் அரச உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்ட காணிகள், வீடுகளுடன் சேர்த்து அபகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.**

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தால் எல்லைக் கற்கள் இடப்பட்டு ஆக்கிரமிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் நிலையில், இதனால் இந்துபுரம் கிராமத்தைச் சேர்ந்த 65 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்துபுரம் கிராமத்தில் 1977ஆம் ஆண்டு மக்கள் குடியமர்ந்துள்ளனர்.
1993ஆம் ஆண்டு அவர்களின் காணிகளுக்கு அரச காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நில அளவைப் படிவங்களைக் காணவில்லை என்று தெரிவித்து 2010ஆம் ஆண்டு மீண்டும் அந்தக் காணிகள் அளவீடு செய்யப்பட்டுக் காணி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அதன்பின்னர் குளத்துக்குரிய ஒதுக்கீட்டுக் காணிகள் அளவீடு செய்யப்பட்டு அவற்றுக்கு எல்லைக்கற்கள் இடப்பட்டன. தனியார் உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.
முறையாக அளவீடு செய்யப்பட்டு மக்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளையே கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் மீண்டும் அளவீடு செய்து எல்லைக்கற்களை யிட்டு அபகரிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அரச காணி அனுமதிப்பத்திரம் மற்றும் தனியார் உறுதிப்பத்திரமுள்ள 65 குடும்பங்களின் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-19)



# பருத்தித்துறை மருத்துவமனையில் சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாணம், பெப்.3
வடக்கு மாகாணசபையின் பல்வேறு நிதிமூலங்கள் ஊடாக 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக தாயும் சிசுவும் ஒன்றாக இருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இந்த சிகிச்சைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. (ச-25,27)

# சட்டவிரோத கடற்றொழிலில் கட்டைக்காடு மீனவர்கள்!



யாழ்ப்பாணம், பெப்.3
வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு மீனவர்களுக்கு, சட்டவிரோதக் கடற்றொழிலில் ஈடுபடவேண்டாமென நீரியல் வளத்துறைத் திணைக்களத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டபோதும் அதனைமீறிச் செயற்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த நான்கு நாள்களாக சட்டவிரோத சுருக்குவலையைப் பயன்படுத்தி பல்லாயிரக்கணக்கான சிறிய மீன்களை அவர்கள் பிடித்துவருவதுடன், பாவனைக்கு உதவாத பெருந்தொகையான சிறிய மீன்களைக் கடலில் வீசிவிட்டும் செல்கின்றனர்.
எனவே இதற்கெதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தப் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 27)



# ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக்கூட்டம்

கிளிநொச்சி, பெப்.3
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக்கூட்டம், வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தலைமையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், காதர் மஸ்தான் உள்ளிட்டோருடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது நெல்லைக் காயவைப்பதற்கான தளம், யானைகள் அட்டகாசம் மற்றும் குரங்குகளால் ஏற்படும் பயிரழிவுகள், குளங்களின் புனரமைப்பு ஆகியவை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (ச-25,500)



# பசியாறும் சோலைத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், பெப்.3
இராஜேஸ்வரி அறக்கட்டளையின் ஏற்பாட்டில், இராஜேஸ்வரி பசியாறும் சோலைத் திறப்பு விழா, கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி திருமண மண்டப வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
இராஜேஸ்வரி அறக்கட்டளையின் தலைவர் செல்லத்துரை திருமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் கலந்துகொண்டார். (ச-25,66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
16.12.1944



மறைவு
01.02.2025

## தம்பு கந்தையா இராஜேந்திர ராவ்

(ஓய்வுநிலை சுருக்கெழுத்தாளர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், செம்மணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கந்தையா இராஜேந்திர ராவ் அவர்கள் நேற்று முன்தினம் (01.02.2025) சனிக்கிழமை அதிகாலை 4.40 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சீதாலட்சுமி தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற விமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், ஜனந்தன், ஜயானந்தி, (மக்கள் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோசெஸ் பத்மலால் (சுகாதார அமைச்சு - வடக்கு மாகாணம்), துஷானி (மாகாண சுகாதாரத் திணைக்களம் - வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ணிகா, லிதுர்ஷிகன், ருத்விக், லக்ஷிவ் ஆகியோரின் பேரனும், சுசீலாதேவி, வத்சலா (ஜேர்மனி), கௌசலா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திராதேவி, இந்திராதேவி, தனபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், துரைசிங்கம், இராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2025) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல 23/01 வெயிலுகந்த பிள்ளையார்**
**கோவில் ஒழுங்கை,**
**செம்மணி வீதி, நல்லூர்.** (CS/57386) J-1

**தகவல் : குடும்பத்தினர்**
**077 715 6106, 077 221 0365**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
•
10
•
1950



மறைவு
16
•
01
•
2024

## பரராஜசேகரம் சிவநாதன் (ரத்தி)

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய் பாடுபட்டு
பார்போற்ற வாழ்ந்த எம்முயிர்த்தெய்வமே
விண்ணுலகம் சென்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் எம் நெஞ்சைவிட்டு அகலவில்லை.
நீங்காத நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**டச்சு வீதி,**
**மீசாலை வடக்கு,**
**மீசாலை.**

(CS53534) (N.1)

**உங்கள் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

## பதவி வெற்றிடம் களஞ்சிய (கிளை) முகாமையாளர் குறியீட்டு இலக்கம் 208/15 (விண்ணப்பங்கள் வெளிவாரியாக கோரப்படுகின்றது)

மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில்
நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01: சம்பள அளவுத்திட்டம் : 208/15 17,435.00-145* 10-160*10-20,485.00
(அத்துடன் கூஊ ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

02. தகைமைகள் : அ) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 16ல் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்துக்கு குறையாத அனுபவம் / கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சம்பளத்திட்டம் 17ல் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடத்துக்கு குறையாத

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரணதராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த (சாதாரண) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, "கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

03 வயது : 18-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் சங்க பணியாளர் களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது

04.பொது
1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்க பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்துவதுடன் ஆதனப்பிணையும் செலுத்தவேண்டும்.
2. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் **பொது முகாமையாளர் மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம் பிரதான வீதி உயிலங்குளம்** என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 17/02/2025ந் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்


**பொது முகாமையாளர்,**
**மாந்தை தெற்கு, ப.நோ.கூ. சங்கம் - உயிலங்குளம்.**

(cr.44239) (N.1)

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
05
•
05
•
1944



மறைவு
01
•
02
•
2025

## கார்த்திகேசு நாகராசா

திருகோணமலை திரியாய்யைப் பிறப்பிடமாகவும் தற்போது இத்தியடி சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நாகராசா நேற்றுமுன்தினம் (01.02.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், ஜெயசீலன், ஜெயவனிதா, ஜெயவதனா, ஜெயப்பிரியா, ஜெயந்தினி (கமநல சேவைகள் நிலையம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திரா (திருகோணமலை), மகேஸ்வரன் (நீர்ப்பாசன திணைக்களம் - மட்டக்களப்பு), கனகரட்ணம் (வவுனியா), விஜயகாந்தன் (விஜயா நகைத் தொழிலகம் - சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கீத், பிரிஸ்னிகா, மதுசாஜினி, யதுசியன், கனிஷ் ஆகியோரின் பேரனும், கனகசுந்தரம், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் குருநாதிப்பிள்ளை, சுந்தரலிங்கம், கனகலிங்கம், மங்கையற்கரசி, சரஸ்வதி, வசந்தமலர், அரசரெட்ணம், கனகமலர், தம்பிராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற அழகுரெட்ணம் (திருகோணமலை) மற்றும் மகேஸ்வரி (மட்டக்களப்பு), இராசமணி (மட்டக்களப்பு), தவமணி (மட்டக்களப்பு), யோகமலர், ராணிமலர், ராணி, கிளி, பாலசிங்கம், நவரத்தினராசா, சந்திராதேவி, சந்திரசேகர், மதிவதனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இத்தியடி வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

(cs.57395) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 648 5558, 075 116 5057**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம்
34 வயது முகாமைத்துவ பட்டதாரி
பட்டயக் கணக்காளர் CA
மிருகசீடம் 3ம் பாதம்
மணமகனுக்கு பொருத்தமான
மணமகள் தேவை.

தொடர்பு:076 615 5015

## வடக்கு ஆளுநரின் பொதுமக்கள் சந்திப்பு இன்று நடைபெறாது

இன்று திங்கட்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனின் பொதுமக்கள் சந்திப்புகள் எவையும் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள் ளது. வழமைபோன்று எதிர்வரும்10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பொதுமக்கள் சந்திப்புகள் இடம்பெறும் என வடக்கு மாகாண ஆளு நரின் ஊட கப்பிரிவு தெரிவித்துள்ளது.

(ச–66)

## நெருக்கடியைத் தவிர்க்கவே வாகனங்களுக்கு அதிக வரி

கொழும்பு, பெப்.3

நாட்டில் மீண்டுமொரு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே இறக்குமதி வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் கல்கமுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சட்டவிரோதமாக வாகனங்களைப் பயன்படுத்திய பலர் இந்த மாதத்துக்குள் கைது செய்யப்படுவார்கள்.

தனிப்பட்ட பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பல ஆண்டுகளின் பின்னர் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் நுட்பமாகவும், கவனமாகவும் செய்யப்பட வேண்டிய ஒரு செயற்பாடாகும். ஏனெனில் எம்மிடம் பெரியளவில் டொலர் கையிருப்பு இல்லை.


ஒரே தடவையில் வாகனங்களுக்கான கேள்வி அதிகரித்துச் சிக்கல் ஏற்படுமாயின் நாட்டின் மீண்டுமொரு நெருக்கடி ஏற்படும். அதனால்தான் வாகனங்களுக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது வாகனங்களின் விலைகள் அதிகரித்தாலும், எதிர்காலத்தில் அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது- என்றார்.

(அ.எ)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
21 . 03 . 1950



மறைவு
17 . 01 . 2024

**அமரர் வீரகத்தி கோபாலகிருஷ்ணன்**
(ஓய்வு பெற்ற கூட்டுறவு சங்கமுகாமையாளர்)

எதையும் தாங்கும் இதயம் எங்கள் அப்பா
உள்ளத்தில் நல்ல உள்ளம் கொண்ட எங்கள் அப்பா
என்று எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அப்பா
நீங்கள் எங்கள் குரு தெய்வம், வழிகாட்டி
எம்மை விட்டு பிரிந்தாலும்
எங்கள் ஒவ்வொரு அசைவிலும்
நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்
உங்கள் கனிவான சிரிப்பையும் பாசத்தையும்
நினைவு கூராத நாட்களே இல்லை அப்பா
மீண்டும் ஒருதரம் வாய்விட்டு அழைத்து
அரவணைக்க வரமாட்டீர்களா? அப்பா...
உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகிறோம்.

பரணி,
மீசாலை வடக்கு
கொடிகாமம்.

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

**VISIT VISA**

Itlay, Swiss விசா- கிடைத்தபின்
கட்டணம் செலுத்தலாம்.
03 வாரங்கள்
(MK Visa World)

தொடர்புகளுக்கு: 074 035 2940

**வாடகைக்கு**

வவுனியாவில் சுப்பர் மார்க்கட்
நாளாந்த கொமிசன் அடிப்படையில்
வழங்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:
074 035 2940

**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**யாழ்ப்பாணம்**

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 20.02.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப் படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 21.02.2025 மற்றும் 22.02.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்./ பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2601 : 021 222 2602

(cr.44231) (N-1)

PEOPLE'S BANK
Pride of the Nation

**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
04.08.1952

மறைவு
27.01.2023

**அமரர் சுந்தரம் சிவலிங்கம்**
(முன்னாள் பொது முகாமையாளர் -
திருவையாறு பலநோக்கு கூட்டுறவு
சங்கம் மற்றும் கட்டட பொருட்கள் கூட்டுத்தாபனம்)

**திதி: தைமாத வளர்பிறை சஷ்டி (03.02.2025)**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs 57396) (N-1)

உ
ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

**மரண அறிவித்தல்**

தோற்றம்
27 . 04 . 1957



மறைவு
02 . 02 . 2025

**அருள்பாலசுந்தரலிங்கம் தங்கமாணிக்கம்**

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருள்பாலசுந்தரலிங்கம் தங்கமாணிக்கம் நேற்று (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அருள்பால சுந்தரலிங்கத்தின் பாசமிகு மனைவியும், நவரத்தினம், காலஞ்சென்ற விஜயரட்ணம் ம்றறும் உதயரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காயத்திரியின் பாசமிகு தாயும், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சாம்பசிவம் - இந்துமதி தம்பதியரின் மகன் சுகந்தனின் பாசமிகு மாமியும், குணவதி, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் பத்மாவதி, சோமாவதி, தியாகலிங்கம், பஞ்சலிங்கம், லீலாவதி, புஸ்பரதி, ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சுகானா, அட்சரா, ஆர்யன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி ஒழுங்கை
திருநெல்வேலிக் கிழக்கு
யாழ்ப்பாணம்.

077 327 1365 (சுகந்தன்)
077 [illegible]
077 462 6129 [illegible]

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 57397) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர்களிடையே எச்.ஐ.வி. தொற்று உயர்வு

**யாழ்ப்பாணம், பெப். 3**

**நாட்டில் இளைஞர்களிடையே எச்.ஐ.வி. மற்றும் பாலியல் ரீதியாகப் பரவும் நோய்கள் அதிகரித்துவருகின்றன என்று சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் நிபுணர் மருத்துவர் விந்தியா குமாரப் பெல்லி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சமூக ஊடகங்களின் பயன்பாடு இதற்கு பிரதான காரணமாக அமைகிறது. அது மட்டுமல்லாமல், சிலர் மது மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டை நாடியுள்ளனர். இதுபோன்ற காரணங்களாலும் பாலியல் ரீதியாகப் பரவும் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி போன்ற நோய்கள் பரவுகின்றன. 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் இந்த விடயத்தில் அதிக பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனால் பாதுகாப்பற்ற கர்ப்பங்களும் நிகழ்கின்றன - என்றார். (ச-இ)

## கிணற்றில் வீழ்ந்து குழந்தை பலி

கொழும்பு, பெப். 3

மெதகமப் பகுதியில் ஒரு வயது நிரம்பிய குழந்தை ஒன்று வீட்டுக்கு அருகிலுள்ள கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மல்கஸ்தலாவ மாகல்லகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த குழந்தை தாயுடன் வீட்டில் இருந்தபோது தாய் உறங்கிய நிலையில் வீட்டின் முன்பிருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்ததிலேயே உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# ஜனநாயகத்தின் தூண் மாவை

### ரணில் இரங்கல்

கொழும்பு, பெப். 3



மாவை சேனாதிராஜா தனது நடவடிக்கைகளை வடக்குக்கும் தமிழ் மக்களுக்கும் மட்டும் மட்டுப்படுத்தவில்லை. நாட்டின் பிற பகுதிகளிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் அவர் பெரும் பங்களிப்பைச் செய்தார்.

இவ்வாறு மாவை சேனாதிராஜாவின் மறைவு தொடர்பில் வெளியிட்ட இரங்கல் குறிப்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மாவை சேனாதிராஜாவின் மறைவை நான் தனிப்பட்ட முறையில் நெருக்கமான ஒருவரை இழப்பதாக உணர்கின்றேன். அவரது இழப்பு உண்மையிலேயே ஈடுசெய்ய முடியாததொன்றாகும்.

மாவை சேனாதிராஜாவும் நானும் 70களில் எங்கள் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்கினோம். வடக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாவை சேனாதிராஜா அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அந்தக் காலகட்டத்தில் அவர் மக்களுக்காக குரல் எழுப்பினார். இத்தகைய ஒரு தலைவரின் இழப்பு வடக்கின் தமிழ் மக்களுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் நாட்டுக்கும் பெரும் இழப்பாகும் - என்றார். (ச-இ)

# சகோதர சமூகங்களுடன் உணர்வுகளால் கலந்தவர் மாவை

### ரிஷாத் பதியுதீன் இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 3

இனங்களுக்கப்பால் மனிதநேயமே முதன்மை என்ற அடிப்படையில் தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுத்தவர் மூத்த அரசியல்வாதியும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான மாவை சேனாதிராஜா என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டுவதில் அரசியல் ரீதியில் குறுகிய சிந்தனைகள் அற்ற பரந்த பார்வையைக் கொண்ட ஒருவராக மாவை சேனாதிராஜா விளங்கினார்.

அத்துடன் தனது சகோதர சமூகத்தின் உணர்வுகளிலும் இரண்டறக் கலந்தவர்.

குறிப்பாக வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றத்தின்போது கண்ணீர் கலங்கியவர் மாவை சேனாதிராஜா. அவரின் இழப்பு தமிழ் பேசும் மக்களுக்கும், குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் தீர்மானங்களிலும் பெரும் இடைவெளியைத் தோற்றுவிக்கும் - என்றார். (ச-இ)

# டெங்கு வீரியம்

கொழும்பு, பெப். 3

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் மாத்திரம் 4,943 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



போக்கட்டி அ.த.க பாடசாலையின் கால்கோள் விழா ஆசிரியர் சி.தவராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-22,159)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



**(பாடசாலைக்காலத்தில் ஒரு வரலாற்றுச் சாதனை 2024ல் இரு மாணவர்கள்)**

**ர.ரோகிந்-142, க.யஸ்வின்-140**

தரம் 5 புலமைப் பரீட்சையில்

பாடசாலை ஆரம்பித்து 90 வருடங்களின் பின் வரலாற்றுச் சாதனை படைத்த இரு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு மாணவர்களை நல் வழிப்படுத்திய பாடசாலை அதிபர் திரு.அ.துஷ்யந்தன், வகுப்பாசிரியர் திருமதி சு.ஜெயரூபன் மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் உளமார வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை சமூகம்**

**யா/அல்வாய் இந்துத் தமிழ் கலவன் பாடசாலை**




சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயத்தில் தரம் ஒன்று வகுப்பில் இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச- 25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டமடைகின்ற

# அரசநிறுவனங்கள் மறுசீரமைப்பு

கொழும்பு, பெப். 3
நட்டமடைந்துகொண்டிருக்கும் 113 அரச நிறுவனங்களை மறுசீரமைக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

கைத்தொழில் அமைச்சின் நிறுவனங்களின் அதிகாரிகளுடனான சந்திப்பொன்றில் அமைச்சின் செயலாளர் திலக ஜயசுந்தர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருந்த குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதொடர்பான ஆரம்பச் செயற்பாடுகள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# ஈழ அரசியல் வரலாற்றில் ஒரு தலைமுறையின் முடிவு

*மாவைக்கு டக்ளஸ் இரங்கல்*

கொழும்பு, பெப். 3
மூத்த அரசியல் போராளியான அண்ணன் மாவை சேனாதிராஜாவின் மறைவு, ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஒரு தலைமுறையின் முடிவாக அமைந்துள்ளது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தியபின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாவை சேனாதிராஜா ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகாலங்களில், அதற்கான நியாயத்தைப் புரிந்து கொண்டவராகப் போராட்ட இயக்கங்களுடன் உறவுகளைப் பேணி ஒத்துழைப்புகளை வழங்கிவந்தார் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)


## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் உள்ள **புடைவை விற்பனை நிலையத்துக்கு** அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் யாழ்நகரை அண்டியுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**076 028 9835**

## உள மகிழ்ந்து வரவேற்கின்றோம்




யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 03.02.2025 முதல் அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்கும் உயர் திரு. பொன்னுத்துரை நடேசலிங்கம் (SLPS1) அவர்களை அகமகிழ்ந்து வரவேற்பதுடன் அவர் தம் பணி சிறக்க எமது கல்லூரியில் அருள்பாலித்தருளும் எல்லாம் வல்ல வேம்படி விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.


## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | - காங்கேசன்துறை உபஅலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | - அருள்முருகன் சபேசன் |
| விண்ணப்பதாரர் பெயர் | - அருள்முருகன் சபேசன் |
| முகவரி | - பிரதான வீதி, காங்கேசன்துறை |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உபஅலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 03,காங்கேசன்துறை வீதி ஆதன இல 1407 இல் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை "நிரலையிட்டி" என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனமானது 24.03.2021ஆந் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் செ.சோபிதன் அவர்கள் முகதாவில் இலக்கம் 786 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் தாய் உறுதியான சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் திரு. V.சேமசுந்தரம் அவர்களால் 19.10.1938 ஆம் திகதிய 137 ஆம் இலக்க சீதன உறுதியால் முருகேசு சிதம்பரநாதர் பெண் பத்மாவதியை வந்தடைந்துள்ளது. இவ் உறுதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தவறவிடப்பட்டுவிட்டது. அத்துடன் தாய் உறுதிக்காக காணிப்பதிவகத்திற்கு விண்ணப்பித்த போது காணிப்பதிவாளரால் குறித்து உறுதி தொலைந்துவிட்டதென சான்றிதழ் பிரதி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. பின் முருகேசு சிதம்பரநாதர் பெண் பத்மாவதி ஆகிய இருவரும் இறக்க அவரது பிள்ளைகளான சிதம்பரநாதர் சபேசன், சிதம்பரநாதர் சந்திரசேகர் ஆகியோரால் 24.03.2021 ஆம் திகதிய 786 ஆம் இலக்க நன்கொடை உறுதிமூலம் அருள்முருகன் சபேசன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்:-**
வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை உள்ளூராட்சி சபை - வலிகாமம் வடக்கு பிரதேசசபை. பிரதேசசெயலாளர் பிரிவு வலிகாமம் வடக்கு, கிராம அலுவலர் பிரிவு J/233 "நிரலையிட்டி" நில.பர 6-1/2 ஆனால் இது 2020ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் B.பிரணவன் அவர்களால் அளந்துவரையப்பட்ட 2020083ம் இலக்க நிலஅளவைப்படத்தில் 01ம் இலக்கத்துண்டாகச் சுட்டப்பட்டபடி நிலப்பரப்பு ஆறு(6) குளி மூன்று தசம் சைபர் ஐந்து (3.05) இந்த ஆறு(6) குளி மூன்று தசம் சைபர் ஐந்து (3.05) க்கும் **எல்லைகள்**

**கிழக்கு** - கே.கே.எஸ் வீதி
**வடக்கு** - பொன்னுத்துரை ஜெபரஞ்சனின் ஆதனம்
**மேற்கு** - முன்னுறுதிப்படி அருளம்பலம் பெண் ருக்மணியின் ஆதனம்
**தெற்கு** - முன்னுறுதிப்படி பரமநாதர் பெண் கந்தையாவின் ஆதனம்
இதடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும்

மேற்குறித்த ஆதனத்தை அருள்முருகன் சபேசன் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருப்பின் இங்குள்ள உறவினர்க்கூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் அருள்முருகன் சபேசன் பெயரிற்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(cs.2413) [N-I]

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின மானிப்பாய் கடைகள் வாடகைக்கு வழங்குதல் - 2025

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின மானிப்பாய் பட்டின உப அலுவலகத்திற்குட்பட்ட மானிப்பாய் சந்தை கடைத் தொகுதியின் மேற்தள கடைகள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் காலம் | : | 2025.02.03 தொடக்கம் 2025.02.17 வரை அலுவலக நாட்களில் மு.ப.2.00 -பி.ப. 3.00 மணி |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி | : | 2025.02.18 மு.ப.10.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | : | 2025.02.18 மு.ப.10.00 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : | தலைமை அலுவலகம். வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை. |

01. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாகவும். வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வாசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி. இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தனித்தனியான கடித உறைகளுள் இட்டு **"தலைவர். உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை. மானிப்பாய்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு உரிய காலப்பகுதிக்கு முள் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். குறித்த நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதுடன். கேள்வி தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கே உள்ளது.

05. கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையை பிரதேச சபையால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.

06. சித்திகர கேள்விதாரர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

07. மாதாந்த கடை வாடகையாக பிரதேசசபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையை செலுத்தவேண்டும் என்பதுடன் குறித்த மாத வாடகைப் பணத்தை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் இறுதி அல்லது அதற்கு முன்னரான வேலை நாளில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறுமிடத்து மாத வாடகைக்குரிய 10% தண்டப்பணம் மேலதிகமாக அறவிடப்படும்.

08. சித்தியடையும் கேள்விதாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக 03 மாத வாடகைத் தொகையை முற்பணமாக செலுத்த வேண்டும்.

09. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

10. பெற்றுக்கொள்ளப்படும் கடையானது உரியநோக்கத்திற்காகபயன்படுத்தப்படுவதுடன் சபையால்தீர்மானிக்கப்படும் வியாபார உரிம / வியாபார வரியை வருடாந்தம் செலுத்துதல் வேண்டும். கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | சந்தைக்கடை இல | கேள்விப்படிவக் கட்டணம் மீளளிக்கமுடியாதது | கேள்விவைப்புபணம் (மீளளிக்ககூடியது) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 1U | 1,000.00 | 8,250.00 | 825,000.00 | 2,750.00 |
| 2 | 2U | 1,000.00 | 8,250.00 | 825,000.00 | 2,750.00 |
| 3 | 3U | 1,000.00 | 8,250.00 | 825,000.00 | 2,750.00 |
| 4 | 4U | 1,000.00 | 9,000.00 | 900,000.00 | 3,000.00 |
| 5 | 5U | 1,000.00 | 9,000.00 | 900,000.00 | 3,000.00 |
| 6 | 6U | 1,000.00 | 9,000.00 | 900,000.00 | 3,000.00 |
| 7 | 7U | 1,000.00 | 9,000.00 | 900,000.00 | 3,000.00 |
| 8 | 8U | 1,000.00 | 9,000.00 | 900,000.00 | 3,000.00 |
| 9 | 9U | 1,000.00 | 9,000.00 | 900,000.00 | 3,000.00 |
| 10 | 10U | 1,000.00 | 9,000.00 | 900,000.00 | 3,000.00 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

**திகதி : 03.02.2025**


(CR/44232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவையின்...

மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்தில் அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. அரசியல்வாதிகள், பொது அமைப்பினர், மதகுருமார்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டனர். (அ-எ-இ)





## தமிழர்களின்...

இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
குருநாகலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். யாழ். மக்கள் முதன்முறையாக தெற்கு அரசாங்கம் மீது, தெற்குத் தலைவர்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதைக் காணமுடிந்தது. இது மிக முக்கியமாகும்.
வடக்கில் உள்ள சில தலைவர்கள் தனிநாடு தருகின்றோம் எனக் கூறிய போதும், அரசியல் பரம்பரையில் வந்தவர்கள் இருக்கின்றபோதிலும் மக்கள் எம்மைத் தேர்வுசெய்தனர். அவர்களுக்கு நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அவற்றை நாம் நிறைவேற்றவேண்டும்.
எம்மிடையே மீண்டும் பிரிவினைவாதம், போர், நம்பிக்கையீனம் என்பன இல்லாத, அனைவரும் ஒன்றிணையக்கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்பவேண்டும். அதற்குரிய ஆசிர்வாதம் வடக்கு மக்களிடமிருந்து கிடைத்துள்ளது. 30 வருடகால போர் மற்றும் அரசியல் காரணங்களால் வடக்குப் பகுதிக்கு அபிவிருத்திகள் சென்றடையவில்லை. அந்தப்பகுதி மக்களின் பிரச்சினைகளை வேகமாகத் தீர்க்க வேண்டும். இது எமது பிரதான கடமையாகும். இனவாதம் மற்றும் மதவாதம் தலைதூக்குவதற்கு நாம் இடமளியோம். தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்புவோம் - என்றார். (அ-எ-44)

## திருத்தப்...

இவ்வாறு உயிரிழந்தவராவார். தொலைத்தொடர்புக் கோபுரத்தில் இருந்து தவறிவீழ்ந்த குறித்தநபர், வவுனியா மருத்துவமனையில் உடனடியாகக் கொண்டுசென்று சேர்க்கப்பட்டபோதும், அவர் உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் வவுனியாப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-110)

## லண்டன்...

பெரும் பிரச்சினைகளைக் கையாளுதல்" என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் விசேட கலந்துரையாடலில் பங்கேற்பதற்காகவே அவர் லண்டன் செல்கின்றார்.
லண்டன், கொன்வே மண்டபத்தில் நாளைமறுதினம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த நிகழ்வு அல்ஜெஸீரா தொலைக்காட்சியில் நேரடி ஒளிப்பரப்பாகவுள்ளது.
பொருளாதார ரீதியில் வீழ்ந்திருந்த இலங்கையின் மறுமலர்ச்சித் திட்டம், ஊழல் மோசடி, மனித உரிமை மீறல் நெருக்கடிகளை எதிர்கொள்ளல் மற்றும் 2019ஆம் ஆண்டு இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க சிறப்புரையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
லண்டனில் தங்கியிருக்கும் நாள்களில் அவர் பல்வேறு சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார். (அ-எ-இ)

## இந்தியாவின்...

ஒதுக்கப்பட்டுள்ளது. அயல் நாடுகளில் நீர்மின் நிலையங்கள், வீட்டு வசதி, வீதிகள், பாலங்கள் மற்றும் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் போன்ற பெரும் உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இலங்கை, பொருளாதார மந்தநிலையிலிருந்து மீண்டு வருவதால், அதற்கான ஒதுக்கீடு 245 கோடியிலிருந்து 300 கோடி இந்திய ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## காணிகளைக்...

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியிருந்தார். இந்தவிடயத்தில் ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார். இந்த விடயத்தில் ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்க முன்னதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கட்டப்பட்ட விகாரையை அகற்றமுடியாது என்றும் அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் மாற்றுக்காணிகளைப் பெற்றுக்கொள்ள சம்மதித்துள்ளனர் என்றும் தெரிவித்திருந்தார்.
தங்கள் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் செயலரும், தற்போதைய ஆளுநருமான நா.வேதநாயகன் தெரிவித்திருந்த கருத்து விமர்சனங்களைத் தோற்றுவித்திருந்தது.
இந்தப் பின்னணியில் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் திடீரென அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.
அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
காணியின் உரிமையாளர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய, காணியின் உரிமையாளருடன் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டிருந்தது.
திஸ்ஸவிகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விகாரைக்குச் சொந்தமான அயலில் உள்ள காணியை மாற்றீடாகத் தங்களுக்கு வழங்கவேண்டும் என்று கோரியிருந்தனர்.
இந்தச் சந்திப்பில் விகாரை தற்போதுள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்று தெரிவித்த அவர்கள் அதற்கான ஆவணங்களையும் சமர்ப்பித்திருந்தனர். திஸ்ஸவிகாரைக்குரிய காணி பிறிதொரு இடத்தில் அமைந்துள்ளதையும் தெளிவுபடுத்தினர்.
விகாரை தற்போது அமைந்துள்ள காணிக்கு மேலதிகமாகவும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த காணி உரிமையாளர்கள், அந்தக் காணியை விடுவித்துத் தருவதுடன் விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாகத் தமக்கு வழங்கவேண்டும் என்று கோரினர்.
காணி உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைய இதுதொடர்பாக விகாராதிபதியுடனும், நயினாதீவு விகாராதிபதியுடனும் பேச்சு நடத்தப்படுகின்றது. இந்த இணக்கப்பாடு யோசனை தொடர்பாக புத்தசாசன அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (எ-இ)

## அதிக...

டுள்ளார். ஆயினும் அவர் உயிரிழந்துள்ளார். நேற்று உடற்கூற்றுப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.
அதிக போதைப் பாவனையே இறப்புக்குக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார். அதே வேளை, குறித்த நபர் ஒரு வாரத்துக்கு முன்னரே சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26)

## புலிகளின்...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மஹிந்த ராஜபக்சவை வெளியேற்றுவதுதான் தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டமாக உள்ளது. மஹிந்த ராஜபக்ச என்பவர் சிங்கம் போன்ற தலைவர். அவர் ஒருபோதும் திணறமாட்டார். முடிந்தால் அரசாங்க வதிவிடத்திலிருந்து வெளியேறுமாறு மஹிந்த ராஜபக்சவுக்கு அரசாங்கம் எழுத்துமூலம் அறிவிக்கட்டும். அவ்வாறு அறிவித்தால் ஒருநாள்கூட அங்கு இருக்கமாட்டார். நிச்சயம் வெளியேறுவார்.
ஆனால் புலிகள் மற்றும் புலம்பெயரிகளின் சூழ்ச்சியை செயற்படுத்தவே முற்படுகின்றனர். வெளியேறுமாறு எழுத்துமூலம் அறிவிக்காமல், மஹிந்தவுக்கு களங்கம் ஏற்படுத்தி, அவரைத் தாமாகவே வெளியேற வைத்து, பாதுகாப்பையும் நீக்கி, உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி, அந்தப் பொறுப்பையும் மஹிந்த மீது திணிப்பதற்குப் பார்க்கின்றனர்.
அதாவது நாம் அறிவிக்கவில்லை, அவர் வெளியே சென்றுவிட்டதால் இப்படி நடந்துவிட்டது என ஆட்சியாளர்கள் கூற முற்படலாம். புலிகளின் சூழ்ச்சிக்கு நாட்டுமக்கள் சிக்கக்கூடாது. நாட்டு மக்கள் மஹிந்தவைப் பாதுகாக்கவேண்டும். அதற்குரிய பொறுப்பு மக்களுக்கு உள்ளது. மஹிந்த வெளியேற வேண்டுமானால் அரசாங்கம் எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும் - என்றார். (அ-எ-44)

## பஸ்ஸில்...

கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பஸ்ஸில் கைதுசெய்யப்பட்டவர் மொனராகலையைச் சேர்ந்தவர் என்றும், கிளிநொச்சி, அம்பாள்குளத்தைச் சேர்ந்த ஒருவரிடம் கஞ்சாவைக் கொள்வனவு செய்துகொண்டு சென்றபோதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. அதையடுத்து கஞ்சாவை விற்பனை செய்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியைத் தவிர்க்கவே வாகனங்களின் வரி உயர்வு

### ஜனாதிபதி சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 3**

**நாட்டில் மற்றுமொரு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கிலேயே இறக்குமதியாகும் வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். குருணாகல் - கல்கமுவப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தனிப்பட்ட பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பல வருடங்களின் பின்னர் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் நுட்பமாகவும் கவனமாகவும் செய்யப்பட வேண்டியதொரு செயற்பாடாகும்.
ஏனென்றால், எம்மிடம் பெரியளவில் டொலர் கையிருப்பு இல்லை. ஒரேதடவையில் வாகனங்களுக்கான கேள்வி அதிகரித்துச் சிக்கல் ஏற்படுமாயின் நாட்டில் மீண்டுமொரு நெருக்கடி ஏற்படும்.
எனவேதான், மேலதிகமாக வாகனங்களுக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.
வாகன இறக்குமதிக்குத் தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு மாறாக படிப்படியாக அந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும்.
தற்போது, வாகனங்களின் விலை அதிகரித்தாலும், சில நாள்கள் செல்லும்போது அதனைக் குறைப்பதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது - என்றார். (ச-இ)

# சமாதானக் கரங்களை பற்றியவர் மாவை

### மஹிந்த பெருமிதம்

கொழும்பு, பெப். 3
எதிர் அரசியலில் ஈடுபட்டிருந்தாலும் சமாதானத்துக்கான கரங்களை நாங்கள் நீட்டியபோது மாவை சேனாதிராஜா சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
எமக்கு எதிர் அரசியலில் அவர் ஈடுபட்டிருந்தாலும் நாடாளுமன்றத்தில் சந்திக்கையில் இணக்கமாகவே செயற்படுவார். சமாதானத்துக்கான கரங்களை நாங்கள் நீட்டிய போது மாவை சேனாதிராஜா சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேசசபைச் செயலாளர் க.சந்திரகுமார் கலந்துகொண்டார். (ச-22,1599)

# வீட்டுக்குள் புகுந்து மூவர் வெட்டிக்கொலை

அம்பலாந்தோட்டை, மாமடல பகுதியில் நேற்று இரவு நடந்த மோதலில் மூன்று பேர் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
6 பேர் கொண்ட குழு வீடொன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த மூன்று பேரை வெட்டிக் கொலை செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், ஏனைய இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர். இரு தரப்பினரிடையே நிலவிய முன்பகை காரணமாக இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (எ-இ)

# மாற்றுதிறனாளர்களுக்கு தீர்வளிக்க குழு நியமனம்



கொழும்பு, பெப். 3
விசேட தேவையுடைய சமூகத்தினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக நாடாளுமன்றத்தில் குழுவொன்றை உருவாக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.
விசேட தேவையுடையோரின் அமைப்புக்களினது ஒன்றியத்துடனான சந்திப்பின்போது, சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டார்.
இந்தச் சந்திப்பில் சைகை மொழியைத் தேசிய மொழியாக்கும் சட்டவரைவை விரைவாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் விசேட தேவையுடைய அமைப்புகளின் ஒன்றியத்தினது உறுப்பினர்களால் இதன்போது சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. (ச-இ)



மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. (ச-25,

# அரகலயவில் புலிகள் வலையமைப்பு மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அவசியம்

### புதிய கதை கூறுகின்றார் திஸாநாயக்க



கொழும்பு, பெப்.3
அரகலய காலப்பகுதியில் புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்பு தீவிரமாகச் செயற்பட்டுள்ளது. அதனால் மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புத் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை, அரச வதிவிடத்திலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
அரசியல் செய்யும் வகையிலுமே அந்த வீட்டை மஹிந்த ராஜபக்ச விஸ்தரித்துக்கொண்டுள்ளார். அதை விஸ்தரித்த காலப்பகுதிதான் பிரச்சினை. நாடு வங்குரோத்து அடைந்து, பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையில் பல மில்லியன்களைச் செலவழித்து வீடு விஸ்தரிக்கப்பட்டுள்ளமை ஏற்புடையது அல்ல. எனினும், அவருக்கு வீடொன்று அவசியம்.
ஜே.ஆர்.ஜயவர்தன, பிரேமதாச, சந்திரிக்கா போன்றஜனாதிபதிகளால்முடிக்கமுடியாமல்போன போரை மஹிந்த ராஜபக்ச முடிவுக்குக் கொண்டு வந்தார். எனவே, மஹிந்தவின் பாதுகாப்புத் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும். பிரேமதாச, ரஜீவ் காந்தி போன்றவர்களை புலிகளே கொலை செய்தனர். அவ்வமைப்பினர் சர்வதேச மட்டத்தில் செயல்படுகின்றனர் - என்றார். (எ-44)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- பலாலி றோட் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300m
- பலாலி-புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல் வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்பு: 077 623 4204 076 755 8606

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org